DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -92/2025

Prosecution PW -1

| Name | Karikalan | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.10.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused absent. 355 BNSS petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.07.2013 ஆம் தேதி நான் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் 2 ம்நிலை காவலராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் கோகுலகண்ணன் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கஞ்சா ரைடிற்கு செல்வதற்காக தேவையான உபகரணங்களுடன் உதவி ஆய்வாளர் என்னையும் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வம் என்பவரை அழைத்து கொண்டு, மன்னார்குடி கோரிமேடு பகுதிக்கு சென்று கண்காணித்த போது, ஒரு நபர் கையில் பையுடன் நின்று கொண்டிருந்தார். போலிசாராகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை, நாங்கள் மடக்கி பிடித்தோம். உதவி ஆய்வாளர் அவரை விசாரித்தபோது எதிரி தன் பெயர் முருகன் என்று தன் பெயர் விலாசத்துடன் கூறினார். உதவி ஆய்வாளர் அவரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் வந்துள்ளதாகவும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு சோதனை செய்ய உங்களை நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிடமோ சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொல்லி, சோதனை அறிவிப்பு நமுனா சார்வு செய்தார். அதற்கு அந்த நபர் அவ்வாறு தேவையில்லை, உதவி ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார். பின்னர் உதவி ஆய்வாளர் எதிரி வைத்திருந்த பையை சோதனை செய்தபோது இலை, பூ, விதையுடன் கூடிய நிலையில் கஞ்சா இருந்தது. எதிரி கஞ்சா வைத்திருந்த குற்ற காரணம் கூறி, உதவி ஆய்வாளர் எதிரியை கைது செய்தார். எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் கொண்டு வந்த தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.100 கிலோ கஞ்சா இருந்தது. அதில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வமும், கையொப்பம் செய்தோம், உதவி

ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மீதம் உள்ள ஒரு கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, ஆய்வாளர் SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வமும், கையொப்பம் செய்தோம், உதவி ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் கைப்பற்றுதல் மகசரில் என் முன்பாகவும், செல்வம் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.த.சாஆ-**1**. பின்னர்,10.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், அதற்கு நான் உதவியாக இருந்தேன். பின்னர் 11.00 மணிக்கு உதவி ஆய்வாளருடன் சம்பவ இடம் சென்ற சம்பவ இடத்தை என் முன்பாகவும் செல்வம் முன்பாகவும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். பார்வை மகசர் அ.த.சா.ஆ-**2** . உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

ரகசிய தகவல் குறித்த விவரம் எனக்கு தெரியாது. சம்பவ இடம் ஆள்நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயார் செய்த கைப்பற்றுல் மகசரில் குற்ற எண், சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு சோதனைஅறிவிப்பு நமுனா எழுத்துமூலமாக கொடுக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரிகள் காவல் நிலையத்திற்கு பரிட்சையமானவர் என்றால் எனக்கு தெரியாது. மாதிரி தடயம் நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒ/ம்.G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்